
# வானொசை



விலை 15/-

அறிவியல் திங்களிதழ்

# உதயம் நிழற்படக் கலையகம்

உங்கள் வீட்டில் நிகழும் திருமண, பிறந்த நாள் மற்றும் எந்தவொரு நிகழ்வுகளாக இருப்பினும் வர்ணங்களாகவோ, கறுப்பு வெள்ளையாகவோ படம்பிடித்து, வேண்டிய அளவுகளில் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## உதயம் நிழற்படக் கலையகத்தை

சிறந்த நிழற்படப்பிடிப்புக் கலைஞர்களைக் கொண்டு யாழ்நகரிலே சிறந்து விளங்கும் உதயம் நிழற்படக் கலையகத்திற்கு ஒரு முறை விஜயம் செய்துபாருங்கள்

திருமணத் தம்பதியினர்களினதும், இறைபதம் எய்தியவர்களினதும் படங்களை நீங்கள் வேண்டிய அளவில் பெருப்பிக்கவேண்டுமா? மற்றும் உங்கள் அலுவலகங்களை அலங்கரிப்பதற்குரிய விதமாக படங்களை வடிவமைத்து பெற்றுக்கொள்ளவேண்டுமா? இன்றே நாடுங்கள்

## உதயம் நிழற்படக் கலையகம்

68, அருச்சுனா சாலை, யாழ்நகர்.


பாடசாலை மாணவர் மட்டுமன்றி பல்கலைக்கழக மாணவர் மற்றும் இன்னோரன்ன என்ற வேறுபாடின்றி இவ் அறிவியல் தாங்கிவரும் வானோசை பல்லாண்டு தொடர வாழ்த்துகிறோம்

12-8-1998

# வானொலிசை

வான் – 01 ஓசை – 10

## ஏமாற்றம்?

இம்மாத இதழ், சிறப்பிதழாக வெளி வரும் என எதிர்பார்த்திருந்த வாசகர்களே! உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஏமாற்றம் குறித்து நாமும் வருந்துவதுடன், உங்களிடம் மன்னிப்பும் கோருகின்றோம். சென்ற இதழில் குறிப்பிட்டது போன்று, இம்மாத இதழைச் சிறப்பிதழாக வெளியிட முடியாதமைக்கு, தற்போது நாட்டில் நிலவும் யுத்தச் சூழ்நிலையே காரணமாகும்.

எதிர்காலச் சூழ்நிலைக்கேற்ப, வெகு விரைவில் சிறப்பிதழ் வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம். அடுத்து வரும் இதழில், அறிவியல் தொடர்பான 'கேள்வியும் பதிலும்' இடம்பெற இருக்கிறது என்பதையும் வாசகர்களாகிய உங்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

அன்புடன்,
— ஆசிரியர்

'வானொலிசை' 202, அரசடி வீதி,
கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

## இந்த ஓசையில்...

△ தங்கம் மீது ஆவல் கொண்ட ஜப்பானியர்.

△ விண்ணில் மர்மத்தீப் பிழம்பு தோன்றுவது எதனால்?

△ உடலுக்குக் கசப்புத் தன்மை ஏன் அவசியம்?

△ நீங்களும் இப்படிப்பட்டவர்களா?

△ போர் அரங்கில் ஏவுகணையின் தாக்கம்.

△ மனித உடலின் வியத்தகு அவயவங்கள்.

△ நான் உங்கள் தோழன்! என்னையும் வாழவிடுங்கள்......

△ கவிதை சொல்லும் கதை.

△ மாரடைப்புக்கான முன் அறி குறிகள் எவை?

△ கின்னஸ் பதிவேட்டுத் தகவல்கள்.

△ பச்சோந்தி, இடத்திற்கு ஏற்ப நிறம் மாறுகிறதே; அது எப்படி?

△ வியட்கொங்கும் விடுதலைப் புலிகளும்.

# தங்கள்மீது ஆவல் கொண்ட ஜப்பானியர்

அரிசியிலும் மற்றும் சில உணவுத் தானியங்களிலும் ஜப்பானியர் தங்கப்பூச்சு மெழுகு முறையைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். வசதியுள்ளவர்கள் ஒரே நேரத்தில் தங்கப்பூச்சுப் பூசப்பட்ட அரிசியையோ அல்லது மற்றத் தானியங்களையோ நூற்றுக்கும் மேலாக வாங்கி வைத்துக்கொள்கின்றனர். அதாவது, உண்கின்ற தானியத்தையே தங்கம் கலந்து சாப்பிடவேண்டும் என்பதற்காக, தங்கப் பூச்சைத் தானியங்களில் செய்துவைத்துக் கடையில் விற்கின்றார்களாம். அவற்றை வசதிபடைத்தவர்களும், ஓரளவு வசதியுள்ளவர்களும், தங்களின் சக்திக்கு ஏற்றாற்போல் வீட்டிலே வாங்கி வைத்துக்கொள்கின்றார்களாம்.

ஒவ்வொருமுறை சமையல் செய்யும்போதும், இதில் ஓர் அரிசியையோ மற்றைய தானியத்தையோ எடுத்துச், சமைக்கும் உணவுப்பொருளுடன் சேர்த்துக் கொள்கின்றனர். இந்த உணவிற்குத் தங்க உணவு என்று பெயர். நூறு தானியங்களில் தங்கப்பூச்சுச் செய்ய ஆகும் செலவு அறுபது (60) வெள்ளியில் இருந்து நூறு (100) வெள்ளிவரையாகும். தானியங்களில் தங்கம் சேர்ப்பதுபோல, தேநீர் மற்றும் பானங்களிலும் தங்கஇலை சேர்த்துச் சாப்பிடும் பழக்கமும் பலரிடம் இருக்கிறது.

இன்று பணம் செலுத்தி ஃபோன் பேசும் அட்டைகளைத் (Cards) தங்கத்தில் வெளியிட்டிருக்கின்றார்கள். வசதியுள்ளவர்கள் தங்களின் சுற்றுலா அட்டைகளைத் (Visiting Card) தங்க அட்டையிலே அச்சிட்டு மிகவும் நெருக்கமானவர்களுக்கும் வியாபார உத்திக்கும் பயன்படுத்திக் கொள்கின்றனர். எமக்கும் இப்போது ஓர் ஆசை தோன்றுகிறது. ஜப்பானியர் எம்மிடம் அகப்பட்டால் அவர்களிடம் சுற்றுலா அட்டைகளைத் (Visiting Card) கேட்ப் பெற்றுக்கொள்ளலாம் போல் தோன்றுகின்றது இல்லையா? ஏனெனில்

அதிலே தங்கப்பூச்சு
இருக்கின்றதே.

ஒரு காலத்தில் ஜப்பான்
நாடு தங்க உற்பத்தியில்
முன்னின்று தங்கநாடாகத்
திகழ்ந்ததாம். திரும்பவும்
அந்தக் காலகட்டம்
வரவேண்டும் என்று அவர்கள்
ஆசைப்படுகின்றனர். அந்த
அடைமொழிப்பெயரை
மீண்டும் பெற்றுவிட
வேண்டுமென்று அவர்கள்
துடிக்கின்றனர். பொருளாதாரப்
போராட்டத்தில் மட்டுமின்றி,
இழந்துவிட்ட தங்கள்
பெருமையை மீட்டுக்
காட்டுவதிலும் அவர்கள்
எவ்வளவு ஆர்வமாய்
இருக்கின்றனர் பார்த்தீர்களா?

ஒட்டகம் வெய்யிற் காலத்தில் மட்டும் 08 நாட்களும், குளிர் காலத்தில் 08 வாரங்களும் தண்ணீர் அருந்தாமல் இருக்க முடியும். ஆனால், ஒட்டகத்திற்குத் தாகம் எடுத்துவிட்டால் நிமிடத்தில் 25 கலன் தண்ணீரைக் குடித்துவிடும்.

அதிக நாட்கள் வாழக்கூடிய முள்ளந்தண்டுள்ள மிருகம் 'ஜயன்ற் ரோரைஸ்' எனப்படும் மாபெரும் ஆமையாகும். மிருகக்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருந்த இந்த ஆமைகள் 100 வருடங்களுக்கு மேல் வாழ்ந்தவை எனச் சொல்லப்படுகின்றது.


## குகன் ஸ்ரூடியோ

உங்கள் தோற்றத்தை அப்படியே பிரதிசெய்ய,
குறித்தநேரத்தில் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய:-

**மறைந்த நாடு**

போலந்து, 1771இல் ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக ஐரோப்பாவின் பெரிய நாடாக இருந்தது. அடுத்த 25 ஆண்டுகளில் அந்த நாடே இல்லாமற் போய்விட்டது. ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்ட்ரியா ஆகிய மூன்று நாடுகளும் அதைக் கபளீகரம் செய்துவிட்டன.

## குகன் ஸ்ரூடியோ

பருத்தித்துறை. சாவகச்சேரி.

# விண்ணில் மர்மத் தீப்பிழம்பு தோன்றுவது எதனால்?

விண்ணில் மர்மத் தீப்பிழம்பு. இதைப்பற்றிச்செய்தியிலும் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். திருவனந்தபுரக் கடற்பகுதியில் தோன்றிய மர்ம ஒளியில், அத்தோடு சேர்ந்த பெருஞ் சத்தமும் நகர மக்களைப் பெரும் பீதிக்கு உள்ளாக்கியது. அந்தப் பிரகாசமிக்க ஒளியின் மர்மம் என்ன? என்பது தெரியவில்லை.
இது 1993ஆம் ஆண்டு நடந்த ஒரு நிகழ்ச்சி. விண்ணில் மர்மத் தீப்பிழம்பு குறித்துப் பத்திரிகைகளிற் செய்திகள் பறந்தபோது அது பாகிஸ்தான் ஏவிய வெடிகுண்டு என்றும், வேற்றுக்கிரக மனிதர்களின் பறக்கும்தட்டு என்றும், இராணுவத்தின் ஏவுகணைப் பரிசோதனைகள் என்றும் எத்தனையோ வித யூகங்கள் வெளியாகின.

ஆனால், அறிவியல் ஆசிரியர் நெல்லை முத்து கூறுகிறார். அண்டவெளி அற்புதங்கள் என்று. மர்மத் தீப்பிழம்புகள் எல்லாம் அண்டவெளி அற்புதங்கள் என்கிறார். ஆனால் இந்த ஒளி வீச்சுக்கள் பெரும்பாலும் கிழக்கிலிருந்து மேற்காகவே பாய்ந்து மறைகின்றன. இதுதானா கல் மழை? நிச்சயமாக இவை விண்கற்கள்தான். திசைமாறி வந்த குறுங்கோள்கள். இவற்றிலே விண் தாதுக்கள் என்பதும் உண்டு.
இவை மாரியாகப் பொழிந்தால் அவ்வளவுதான். ஆலங்கட்டி மழைக்கே நம்மால் தாக்குப் பிடிக்க இயலாது.
இப்படியொரு விண்கல் மழை பூமியில் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் பெருவாரியாகப் பெய்யும் அபாயம் இருப்பதாக மேல்நாட்டு அறிஞர்கள் அச்சுறுத்துகிறார்கள். அந்தச் செய்திகள் உகாண்டாவில் இம்பாரா வாசிகளை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. இத்தகைய விண்கல்மழை மேலும் சில ஆண்டுகளுக்குள் பூமியைத் தாக்க வருகிறதாம்.

இன்னொரு செய்தி என்னவென்றால் சமீபத்தில் பூமிக்கு அருகே ஏதோ இனம்புரியாத ஒளிப்பிழம்பு ஒன்று வந்து பயங்காட்டிவிட்டுப்

போயிருக்கிறதாம்.
இவை வானவெளியில் என்றோ ஒருநாள் மோதி 2121 ஆம் ஆண்டளவில் உலகம் அழியும் என்றும், வானவியற் சோதிடர்கள் கணிப்பொறிகளின் முன்னமர்ந்து அறிந்துள்ளார்களாம்.
பூமியிலிருந்து நான்காவதான நெப்ரியூன் கோளுக்கு அப்பால் வட்டமடித்துவரும் மற்றொரு வால்நட்சத்திரம் 1993 எஃப். டபிள்யூ.(F.W.) என்று பெயரிடப்பட்டது.
சுமார் 200 கிலோ மீற்றர் குறுக்களவு கொண்ட இந்தப் புதிய வால் விண்மீன்கள் நெப்ரியூன் சுற்றுவட்டத்திற்கு அப்பால் கூட்டங் கூட்டமாக வலம் வருகின்றனவாம்.
அவற்றைக் குயிப்பர் டபைட் என்கிறோம். பிரபலமான ஹிடி வால் விண்மீன் போல் 26 ஆண்டுகளுக்கு ஒருமுறை அடிக்கடி வந்து எட்டிப் பார்க்குமாம். வால் விருந்தாளிகள் சூரியக் குடும்பத்தினுள் குயிப்பர் வீதியைச் சார்ந்தவர்களாம்.
இப்புதிய கண்டுபிடிப்பிற்கு 4 நாட்கள் முன்னதாகத்தான், அமெரிக்காவில் பலோம் (Phalome) குன்றிலிருந்து ஜுஜின் கறோலின் (Joujin Karolin) ஷுமேக்கர் (Shoe maker) மற்றும் நேவிற்லெவி (Navitlevy) ஆகியோர் புதியதொரு வால்நட்சத்திரத்தினைக் கண்டு அதிர்ச்சியுற்றனர். விஷயம் இதுதான்:- அந்த வால் விண்மீன்கள் 10 தலைகள் கொண்டனவாகத் தோன்றினவாம்.
நாம் அறிந்த விண்மீன்களுள் வால் தெறித்து விசிறிச்சிதைந்த விண்மீன்களும் வானவியல் வரலாற்றில அவ்வளவு அதிசயமில்லை. அதன் தலைக் கோளமாகிய கரு மையம் பாசிமணி மாலை மாதிரி ஒரே சுழற்றில் கோர்த்துக் கிடப்பது விநோதம்தான் என்கிறார்கள்.


# லவன் மோட்டார் சைக்கிள் திருத்தகம்

உங்கள் மோட்டார் சைக்கிள் பிரச்சினைதருகிறதா?
ஒருதடவை எம்மிடம் கொண்டுவாருங்கள்.

லவன் மோட்டார் சைக்கிள் திருத்தகம்

கண்டி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

# உடலுக்குக் கசப்புத் தேவை இல்லையா?

மனித உடலின் உறுப்புக்கள் அனைத்தையும் இயக்குவதும், மனத்தை இயக்குவதும், மூளையை இயக்குவதும், நரம்புகள்தான். ஒருவருக்கு நரம்புகள் வலிமையாய் இருந்தால் அவர் பலசாலியாகவும், சுறுசுறுப்பானவராகவும், பல வேலைகளைச் சோர்வின்றிச் செய்பவராகவும் இருப்பார். இத்தகைய, நரம்புகளுக்கு வலிமையூட்டும் சுவை, கசப்பே ஆகும். சிலர், தம் உடலின் இரத்தம் தூய்மையாக வேண்டும் என்பதற்காகவும், உடலில் சர்க்கரைச் சத்துச் சேராமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும், நாள்தோறும் காலையில் வேப்பிலைக் கொழுந்தை உண்பர். அத்தகையோரின் உடலில் கசப்புச் சேர்ந்தாலும், அவர் உடலில் தோன்றும் புண்களும், ஊறல்களும், படைகளும் அவ்வளவாக நீங்குவதில்லை. அதற்குக் காரணம் என்ன? அவர்கள் காலையில் மட்டும், கசப்புச்சுவை தரும் வேப்பிலைக் கொழுந்தை உண்பது உண்மை தான். ஆனால், மற்ற வேளைகளில் அவர்கள் புளிப்பு, காரம், இனிப்புப் போன்ற சுவை மிகுந்த உணவை உண்டு விடுகின்றனரே. உப்பை விட, புளிப்பு மிகுதியாய் இருந்தால், சுறுசுறுப்புக் குறைந்து, சோம்பலே மிகுதி ஆகும்.

உடலில் தேவைக்கு அதிகமாகப் புளிப்பு இருக்குமானால், அது கசப்புக்குத் துணையாகி, பல வேலைகளைச் செய்யப் பயன்படும்.

உடலின், உண்ட உணவு செறிமானம் ஆவதற்கு உதவும் சுவைகளுள் கசப்புச் சுவையும் ஒன்றாகும். உப்பும், கசப்பும், பித்தத்தின் சுவைகள்.

உடலின் வெப்பத்தைக் குறைக்கும் நாடியே, பித்தநாடி ஆகும். அதனால்தான், பித்தநாடி ஒடுங்கிவிட்டால், உயிர் நீங்கி விடும் என்று சித்தர்கள் கருதினர். மனித உடலில் கசப்புக் குறைந்தால், பலவீனம், சோம்பல், தலைவலி, உடல்வலி, காசம், நரம்புப்பலவீனம் முதலியன உண்டாகும். கசப்புச் சுவையும் உப்புச் சுவையும் உடலில் குறைந்தால், கல்லீரல், மண்ணீரல் போன்ற முக்கியமான செறிவான உறுப்புக்கள் பாதிக்கப்படும். இத்தகையவர்கள் உடற்பயிற்சி செய்வதும் நல்வது.

இத்தகையவர்கள் கசப்புப் ண்டங்களை உணவிற் சேர்த்துக் கொள்வது நல்லது. மேலும், நாள்தோறும் ஆசனம், மூட்டுப் பயிற்சி ஆகியவற்றையும் செய்யவேண்டும். செய்தால், நரம்புகளின் பலவீனம் நீங்கி, நரம்புகளின் இயக்கம் சீராகி விடும். உடலில் கசப்பு மிகுந்தவர், கடற்கரைப் பகுதிகளில் வாசம் செய்வதும், குளிர்ப்பகுதிகளில் வாழ்வதும், நன்மையைத் தரும்.

கசப்புச்சுவை, நாக்குச்சுவைக்கு ஒவ்வாத ஒன்றாகும். என்றாலும், அதனால் ஒவ்வாமைக் கோளாறுகள் ஏற்படுவது இல்லை. கசப்பு அளவுக்கு மேலே இருந்தால், ஊறற்படை முதலிய தோல் நோய்கள் உண்டாகும்.

கத்திரிக்காய் போன்ற காய்வகைகளை, அவர்கள் தங்கள் உணவில் சேர்த்துக்கொள்ளாமல் விலக்கி விடுவது நல்லது.


## ரூபி அரைக்கும் ஆலை

ரூபி அரைக்கும் ஆலை உங்கள் தேவைகளை நம்பிக்கையுடன் பூர்த்தி செய்கிறது.

நெல் குற்றல், அரிசி, மிளகாய் அரைத்தல், உழுந்து உடைத்தல் ஆகியவற்றுடன், தரமான குரக்கன் மா, அரிசி மா என்பனவற்றைப் பெற்றுக்கொள்ள:-

ரூபி அரைக்கும் ஆலை

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

# நீங்களும் இப்படிப் பட்டவர்களா?

தொகுப்பு:- நவகீதன்

## கடவுள் நம்பிக்கை?

ஒரு நாள் ஒருவன் மலையொன்றின்மேல் ஏறிச் சென்றுகொண்டு இருந்தான். அப்போது, தவறுதலாக ஒரு பள்ளத்தாக்கில் விழுந்து கொண்டிருந்தபோது, இடையில் உள்ள மரவேரில் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்தான். ''அடக்கடவுளே! என்னைக் காப்பாற்றமாட்டாயா?'' என்று கத்தினான். உடனே கடவுளின் குரல் கேட்டது. ''மகனே! நீ கவலைப்படாதே; நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். நீ பிடித்திருக்கிற வேரை விட்டுவிடு'' என்று, அந்தக் கடவுளின் குரல் ஒலித்தது. உடனே அவன், ''நான் எப்படி வேரை விடமுடியும்? விட்டுவிட்டால் நான் கீழே விழுந்துவிடுவேனே'' என்று கத்தினான்.

## செத்துப்போக வைத்தியம்

ஒருநாள் ஒருவர் மனோதத்துவ மருத்துவர் ஒருவரைத் தேடிச் சென்றார். ''எனக்கு மனதிலே ஏதோ கோளாறு இருக்குது. ஆகவே, கெதியில் செத்துப்போனால் தேவையில்லை என்று தோன்றுகிறது'' என்று கூறினார். உடனே அந்த மருத்துவர், என்ன சொன்னாரென்றால், ''உங்களுக்கு கெதியாகச் செத்துப்போகலாம் என்று தோன்றுகிறது இல்லையா? அப்படியென்றால், இங்கேயே இருங்கள்; நானே உங்களுக்கு வைத்தியம் பார்க்கிறேன்'' என்றார்.

## உயிரா? பணமா?

ஒருநாள் ஒருவன் குளத்தில் தவறுதலாக விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தான். இன்னொருவர் அதைப் பார்த்து இரக்கப்பட்டார். உடனே குளத்திலே குதித்து, அவரைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டுவந்தார். தத்தளித்தவர் சொன்னார்:- ''மிகவும் நன்றி உங்களுடைய ஜீவகாருண்யத்தைப் பாராட்டி ஒரு 50 சதம் காசு கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். ஆனால், என்னிடம் ஒரு ரூபாய் நோட்டாக இருக்கிறது அதுதான் யோசிக்கிறேன்'' என்று. அதற்கு, காப்பாற்றினவர் சொன்னார்:- அப்படியென்றால், இந்தக் குளத்திலே இன்னொரு தடவை விழுந்திடுங்கள்; மீண்டும் ஒருமுறை நான் காப்பாற்றுகிறேன் அதன் பிறகு, இருக்கிற ஒரு ரூபாயையும் கொடுங்கள்'' என்று.

## இருந்தால் கொடுக்க மாட்டேன்.

ஒருநாள் இரண்டு நண்பர்கள் சந்தித்துக்கொண்டனர். ஒருவன், இப்போது என்னிடம் இரண்டு இலட்சம் இருந்தால், அரைவாசியை உனக்குக் கொடுப்பேன் என்றானாம். மற்ற நண்பன், உன்னிடம் இரண்டு கார்கள் (Cars) இருந்தால், என்ன செய்வாய் என்றானாம். உனக்கு ஒரு காரைத் தருவேன் என்றானாம். சரி, இரண்டு வீடுகள் இருந்தால், என்ன செய்வாய்? என்று கேட்டானாம் பிறகு. அதில் ஒன்றை உனக்குத் தருவேன் என்றானாம். சரி உன்னிடம் இரண்டு பேனாக்கள் இருந்தால், ஒன்றை எனக்குத் தருவாயா? என்று கேட்டானாம். அதுமட்டும் முடியாது; கொடுக்கமாட்டேன் என்றானாம். என்ன நண்பா! பணம், கார், வீடு இதெல்லாம் தருகின்றேன் என்றாய். பேனாவை மட்டும் தரமாட்டேன் என்கிறாயே என்று கேட்க; ஏன் அப்படிச் சொன்னேன் என்றால், இப்போது என்னிடம் இரண்டு பேனாக்கள் இருக்கிறதே; அதனால்தான் அப்படிச் சொன்னேன் என்றானாம் அந்த நண்பன்.

## அரசியலில் அப்பனையே நம்பாதே மகனே!

ஒரு சிறுவன் தன்னுடைய அப்பாவிடம் போய், அப்பா உங்களைப்போல் நானும் அரசியலில் சேரவேண்டும். தலைவர் ஆக வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இன்றையிலிருந்து அரசியற் பாடம் கற்றுக்கொடுங்கள் என்றானாம். அவரும் சரி என்று சொல்லி பெரிய ஏணி ஒன்றைக் கொண்டுவந்து ஒரு சுவரிலே அதைச் சாத்தினார். இந்த ஏணியிலே ஏறி உயரப்போய் அங்கே பரண் மேலே இருக்கிற புத்தகத்தை எடுத்துக்கொண்டு வா என்றார் மகனைப் பார்த்து. அப்பா ஏணி உயரமாக இருக்கு நீங்கள் வந்து யாக்கிரதையாக இதைப் பிடித்துக்கொள்ளுங்கள் ஏறப்போறன் என்றான் மகன். பயப்படாதே நான் பார்த்துக் கொள்கின்றேன் என்றார் அப்பா. சிறுவன் ஏணியிலே ஏறினான்.

உச்சிக்குப் போனதும் அப்பா கையை எடுத்துவிட்டார். ஏணி சாய்ந்துவிட்டது, சிறுவன் தொப்பென்று கீழே விழுந்துவிட்டான். விழுந்ததும் இடுப்பைப் பிடித்துக்கொண்டு எழுந்திருந்தான். என்ன அப்பா இது. இப்படி ஏறவிட்டுட்டு கையை விட்டுவிட்டீயலே என்று கத்தினான். அப்பா நிதானமாகச் சொன்னார்:- அவசரப் படாதே மகனே அரசியலிலே இதுதான் முதற்பாடம். பெத்த அப்பனாய் இருந்தாலும் அவனை நீ நம்பாதே என்று உபதேசம் செய்ய ஆரம்பித்தார்.

## போர் அரங்கில்

# ஏவுகணை

'ஏவுகணை' என்று தமிழில் கூறுகின்றோம். தொலைவிலுள்ள ஓர் இலக்கைத் தாக்குவதற்காக ஏவப்படும் / எறியப்படும் எதையுமே ஏவுகணை என்று அழைக்கலாம். ஏவப்பட்ட பிறகு, தனது உந்து விசையாலேயே செல்லுந் திறன் படைத்ததாக இருக்கவேண்டும்.

எனவே, துப்பாக்கியிலிருந்து வெளியேறும் குண்டும், விமானத்திலிருந்து வீசப்படும் குண்டும் இலக்குகளைநோக்கிச் செல்கின்றன. என்றாலும், அவற்றை ஏவுகணை என்று சொல்லிவிடமுடியாது.

ஏவுகணைகளில் இரண்டுவகை உண்டு. 'அன்ட்கையிடட் மிசையில்' (Unguided Missiles) அதாவது, ஏவப்பட்ட தளத்தைவிட்டுப் புறப்பட்டபின், தன் உந்து விசையாலே செல்லுகின்ற பாதையிலிருந்து திசையை மாற்றிக் கொள்ளமுடியாத ஏவுகணைகள். பொங்கல் அன்று றொக்கெற் (Rocket) விடுகிறோமே; அது போல, ஏவப்பட்ட பின்னே, இவற்றைத் திசை திருப்பமுடியாது. இவ்வகையான ஏவுகணைகள் இரண்டாம் உலகப்போரின் போது பயன்படுத்தப்பட்டன.

இப்போது அறிவியல் (விஞ்ஞானம்) வளர்ந்துவிட்ட நிலையில், இலத்திரனியற் கணனி (Electronic Computer) வளர்ச்சியால், செலுத்தப்பட்ட ஏவுகணைகளைத் தொலைக்கட்டுப்பாட்டின் உதவியால் இலக்குகளை நோக்கித் திருப்பிவிட முடியும். வானூர்திகள், கப்பல்கள் போன்ற இலக்குகளைக் கண்டறியும் தொலை உணர்வுக் கருவிகள் இந்த ஏவுகணையிற் பொருத்தப்பட்டு இருப்பதால், வானூர்தி அல்லது கப்பல் நகர்ந்துகொண்டு இருக்கும்பொழுதே, அவற்றை நோக்கிச் சரியான இலக்கிற் சென்று இவற்றால் தாக்கமுடியும். இந்த ஏவுகணைகளின் முனையில் வெடிகுண்டுகளைப் பொருத்தி, அவற்றை ஏவி, பகைவனின் இலக்குகளைத் தாக்குவது போர்க்காலங்களில் நடைபெறுகின்றது. ஏவுகின்றபொழுதே, இவ்வளவுதூரம்

# யின் தாக்கம்

சென்று தாக்கவேண்டும் என்று கணக்கிட்டு வைத்தால், அந்தத் தொலைவுக்குச் சென்று அதனால் தாக்கமுடியும்.

வானூர்திகளைப் பயன்படுத்திக் குண்டு வீசுவதைக் கைவிட்டு, ஏவுகணைகள்மூலம் குண்டு வீசுவதால் என்ன இலாபம்? என்று நீங்கள் கேட்கலாம். நெடுந்தொலைவுக்கு வானூர்தி செல்லும்பொழுது, அவை தாக்கப்படலாம். அதில் இருக்கும் பணியாளர் உயிர் இழக்கலாம். அணுக் குண்டு போன்றவற்றை வீசிவிட்டு, வானூர்தியால் பத்திரமாகத் திரும்பிவிட முடியாமற் போய்விடலாம். வானூர்திகளை விட, ஏவுகணைகள் அளவிற் சிறியவை என்பதால், இவை இலகுவானவை. முன்பெல்லாம் ஒரு விநாடிக்கு 07 கி. மீ. அதாவது, மணிக்கு 15,000 மைல் வேகத்திற் செல்லும் ஏவுகணைகளைத் தடுத்துநிறுத்துவது என்பது இயலாத செயலாக இருந்தது. இப்பொழுது அறிவியல் முன்னேற்றம் காரணமாக, அதுவும் சாத்தியமாகிவிட்டது.

இந்த 'ஏவுகணைகள்' 'ஜெட்' உந்துவிசை மூலம் விண்ணிற் செலுத்தப்படுகிறது. இலக்கை நோக்கி மிக அழுத்தத்திலிருந்து அடைத்து வைக்கப்பட்டிருந்த வாயு பின்புறமாக வெளியேறும் பொழுது, ஏவுகணை முன்னே உந்தப்படுகின்றது. இப்பொழுது, குறிப்பிட்ட உந்துவிசை வழிகாட்டும் முறை; அணுக்குண்டுகளை உடைய வால்செட் எனப்படும் ஒருவித முறை ஆகிய இவற்றால் உலகம் மிகவும் அபாயகரமாகி விட்டது. நெடுந்தொலைவு ஏவுகணை ஒன்று, குறிப்பிட்ட இலக்கைத் துல்லியமாகக் கணக்கிட்டுத் தாக்கிவிட முடியும்.

ஓர் ஏவுகணை மூலம், இரண்டாம்உலகப்போரில் பயன்படுத்திய மொத்த அளவு குண்டுகளையும் ஒரே நேரத்தில் வீசிவிட முடியும் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். ஆனால் ஒன்று, ஓர் ஏவுகணையில் ஐந்து இலட்சம்(5000,00) உறுப்புக்கள் உள்ளன. இவை அனைத்தும் பழுதுபடாமல் செயற்பட வேண்டும். சில உறுப்புக்கள்

பழுதுபட்டாலும், இலக்கை மாறித் தாக்கும் அபாயம் ஏற்படும். தவிர, வானூர்தியைத் தாக்கும் ஏவுகணை தரையில் உள்ள இலக்குகளுக்குப் பயன்படாது. இலக்குகளில் மாற்றம் ஏற்பட்டால், அதாவது, திட்டத்திற்கு மாறாக இலக்கு நகர்ந்திருந்தாலோ, அல்லது வேறு இடத்தில் இருந்தாலோ, அமைப்பு மாறியிருந்தாலோ, அந்நிலைக்குத் தக்கபடி தமது போக்கை மாற்றிக் கொள்ள, ஏவுகணைகளுக்குமூளை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தரையில் இருந்து விண்ணுக்குச் செல்லும் ஏவுகணை, தரையில் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு ஏவக்கூடிய ஏவுகணை, விண்ணில் இருந்து தரைக்கு ஏவக்கூடிய ஏவுகணை என்றவாறு ஏவுகணைகளைப் பிரிக்கலாம். கண்டம் விட்டுக் கண்டம் பாயக் கூடியவை, இடைப்பட்ட தொலைவிலே செல்லக்கூடியவை, சிறிது தொலைவிலே செல்லக் கூடியவை, நீண்ட தூரம் செல்லக் கூடியவை என்று; பல தரப்பட்ட ஏவுகணைகள் இருக்கின்றன. இவை எல்லாம் போர்க்காலத்தில் பயன்படுகின்றன.


# கலா வெதுப்பகம்

தரமான பாண், பிறந்தநாள் கேக் ஆகியவற்றிற்கு வடமராட்சியில் புகழ்பெற்ற வெதுப்பகம்.

**நாவல் தெரு**

*ஒரு தெருவுக்கு, பிரபலமான நாவலின் பெயர் சூட்டப்பட்டிருப்பது, இந்தியாவின் கல்கத்தாவில் மட்டுமே காணப்படும் அதிசயமாகும். 19 வது நூற்றாண்டில் தாராநாத் காங்கூலி என்பவர் எழுதிய புகழ்பெற்ற நாவல் 'ஸ்வர்ணலதா'; அப்பெயரால் ஒரு தெரு அழைக்கப்படுகிறது.*

கலா வெதுப்பகம்

துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

ஓடர்கள், குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

# மனித உடலின் வியத்தகு அவயவங்கள்

- ஆரோக்கியமான மனிதனின் இதயத்துடிப்பு, நிமிடத்திற்கு 72 முறை துடிக்கும்.
- மனிதனின் நடை வேகம், மணிக்கு 06 கி. மீ.
- நமது உடலின் முக்கியமான பகுதியாகக் கருதப்படும் மனித மூளையின் எடை 1360 கிராம்.
- மனித உடலின் எலும்புகளின் எண்ணிக்கை 206.
- தொடை எலும்புதான், மனித உடலிலேயே மிக நீளமான தனி எலும்பு.
- மனிதனின் கைகள் 27 சின்னஞ்சிறு எலும்புகளால் உருவானவை,
- குழந்தை பிறந்தவுடன், அந்த உடலில் உள்ள மொத்த எலும் புகள் 350.
- மனிதனின் பாதங்களில் 26 நரம்புகள் உள்ளன.
- நம்முடைய உடலில் உள்ள எலும்புகளில் மிகச் சிறியது, காதுக் குள் இருக்கும் எலும்பு.
- மனித உடலில் உள்ள பெரிய தசை இதயம்.
- மனித உடலிலேயே மிகவும் குளிர்ச்சியான பாகம், மூக்கின் நுனி.
- புரதம் உடலின் எல்லாப்பகுதிகளிலும் உண்டு.
- மனித உடலிலுள்ள சாதாரண வெப்பநிலை 98.4 பாகை பரனைற்று.
- ஒரு மனிதனின் இரத்தத்தில் சாதாரணமாக இருக்க வேண்டிய சர்க்கரையின் அளவு 120 மில்லி கிராம்.
- உடலில் மிகுதியாகக் காணப்படும் இரசாயனக் கலவை தண்ணீர்.
- கனவுகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் உடலிலுள்ள உயி ரணுக்களின் துடிப்பு.
- மனித செல்களில் (கலங்களின்) அடங்கியுள்ள குரோமசோம் களின் எண்ணிக்கை 23 கோடி.

- சராசரி மனிதனின் இருதயத்தின் எடை 340 கிராம்கள்.
- ஆண்களின் பால்வகைச் சுரப்பியின் பெயர் டெஸ்டிஸ்
- பெண்களின் பால்வகைச் சுரப்பியின் பெயர் ஓவறி.
- உடலில்லுள்ள நீளம் கூடிய கலம் நரம்புக்கலம்.
- மூளையிலுள்ள நரம்புகளின் எண்ணிக்கை 1400 கோடி.
- நியூரான் என்றால் நரம்புக்கலம்.
- இருதயத்திற் பொதிந்திருக்வும் உறை கபரிக்கார்டியம்.
- ஈரலிலிருந்து புறப்படுகின்றது என்ஸைம் பித்தம்.
- மூளையில், கல்வியை கட்டுப்படுத்தும் பாகம் காரடைக்ஸ் பெருமூளை.
- உடலில் மிக வலிமை வாய்ந்த பாகம் பல்லின் இனாமல்.
- மனிதச் சிறுகுடலினி நீளம் 15 . 20 அடி.
- கர்ப்பந்தரித்த பிறகு, கருவின் இயத்தசை முதலாவதாகச் சுருங்குவது 25- வது நாளில்.
- ஒரு குழந்தையின் முதல் சுவாசம் ஆரம்பிப்பது; முதலாவதாவு அழும்போதுதான். கருவில் இருக்கும் குழந்தை கூடக் கனக காண்கிறது.
- தாயின் வயிற்றில் குழந்தை கருக்கரித்த 18- வது நாளிலேயே அதன் மூளை வளர ஆரம்பித்துவிடுகிறது.
- மனித உடலிலுள்ள மிகப்பெரிய உள்ளுறுப்பு கல்லீரல்.
- உடலிலுள்ள மிகப் பெரிய இரத்தக்குழாய் அயோர்ட்டா.
- மனித உடலில் 24 மூலகங்கள் உள்ளன.
- மிருதியான என்ஸம் (நொதியம்) உற்பத்தி செய்கின்ற உடலுறுப்பு ஈரல்.
- குழந்தைகளுக்கு மிகவும் நல்ல உணவு தாய்ப்பால்.
- மனித உணவு மண்டலத்தின் நீளம் 7.5 மீற்றர்.
- ஜீரணமடைந்த உணவை இரத்தத்திற்கு வலித்தெடுக்கும் உறுப்பு வில்லை என்பதாகும்.
- இரத்தத்தை இரத்தக் குழல் வழியாகத் தள்ளிவிடும் உறுப்பு இதயம்.

- உடலில் சுத்தமான இரத்தத்தைக்கொண்டு செல்லும் குழாய்கள் நாடிகள்.
- அசுத்த இரத்தத்தை நுரையீரலுக்குக் கொண்டு செல்லும் குழாய்கள் நுரையீரல் நாடிகள்.
- உடலில் ஏற்படும் அசுத்த இரத்தத்தை இருதயத்திற்குக் கொண்டு செல்லும் குழாய்கள் நாளங்கள்.
- நம்முடைய உடலிலுள்ள தசைகளில் மிக அதிகமாக இயங்குவது கண்களின் தசைகள்.
- உடம்பில் இரத்த ஓட்டமில்லாத பகுதி விழிவெண்படலம்.
- உடம்பில் இரத்தத்தின் அளவு நான்கு சத விகிதம்.
- கருப்பையிற் கரு உண்டானதும், குழந்தையில் உருவாகும் முதல் உறுப்பு இதயம்.
- ஒரு சிறுநீரகத்துடன் மனிதன் உயிர் வாழ முடியும்.
- உடலில் உள்ள உயிர்த் திரவம் இரத்தம்.
- நம்மிடமுள்ள இரத்தத்தின் நிறம் சிவப்பு. ஆனால், மூளையிலுள்ள இரத்தத்தின் நிறம் பழுப்பான நீல நிறமாகும்.
- உலகில் எட்டுப்பேருக்கு ஒருவர், குறட்டை விடுபவராக உள்ளனர்.
- மனித உடலில் முதலில் இறக்கும் பாகம், மூளையின் கலங்களாகும்.
- பிறவியிலேயே கண்பார்வை இழந்தவர்களுக்குச் செயற்கைக்கண், பார்வை அளிக்காது.
- உடலில் உயிர் உள்ளவரை வளர்ந்து கொண்டே இருக்கும் உடலுறுப்புக்கள் முடி, நகம்.
- பரிணாமத்தில் மிக உயர்ந்த உயிர், மனிதன் தான்.


# சிவகுமாரன் புடைவை மாளிகை

நம்பிக்கை, நாணயம், புதுப்புது ரகம்

குடும்பத்தில் அனைவருக்கும் ஏற்ற ஆடையணிகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:-

**சிவகுமாரன் புடைவை மாளிகை**

பிரதான வீதி, பருத்தித்துறை

# நான் உங்கள் தோழன்! என்னையும் வாழவிடுங்கள்...

நுளம்பாரே! நீர் எங்கள் தோழனா? எப்படி இருக்கமுடியும்? உம்மை வாழவிடுவதா? நீர்தான் எங்கள் பரம எதிரியாச்சே!

நீர், மனிதர்களின் இரத்தத்தை மட்டுமா உறிஞ்சிக் குடிக்கிறீர்? மூளைக் காய்ச்சல் மஞ்சட் காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல், எனும் கொடிய நோய்களையுமல்லவா உண்டாக்கிச் செல்கிறீர். உம்மால் உயிர் இழந்தவர்கள், உயிருக்காகப் போராடுபவர்கள் கொஞ்சநஞ்சமா?


**ஆத்திரப்படாதீர்கள்!**

இயற்கை நமக்குக் காட்டிய வழியிலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எங்கள்மீது நீங்கள் கோபித்தால், நாம் என்ன செய்யமுடியும்? பசியின் நிமித்தம், சிறகடித்து உங்களை நெருங்கியபோதெல்லாம் உங்கள் கைபட்டு, நசிபட்டு உருத்தெரியாமல் வீசப்பட்டவர்கள் எம்மில் எத்தனை பேர்? நாங்களும் உங்களைப்போன்று ஓர் உயிரினம்தானே? நீங்கள், கொஞ்சமாவது எங்கள்மீது கருணை காட்டக் கூடாதா?

நாம், உருவத்தில் ஒரு தூசிபோல் இருந்த போதிலும், பெரிய உருவம் கொண்ட மனிதர்களாகிய உங்களது கண்களுக்குள் மண்ணைத் தூவி, உங்கள் உடலைச் சுரண்டி வாழ்ந்தோம்; வாழ்கிறோம் என்பதெல்லாம் உண்மைதான். இது, இயற்கை எமக்களித்த கொடையென எண்ணி இவ்வளவு காலமும் மகிழ்ச்சியாக வாழ்ந்தோம். இன்று, இயற்கையையே சுரண்டுகிற அளவிற்கு, மனிதர்களாகிய நீங்கள் விஞ்ஞான, தொழில்நுட்பரீதியாக முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, தொடர்ந்தும் உங்களைப் பேய்க்காட்டி, எம்மால் வாழமுடியாது என்பதை அநுபவரீதியாக உணர்ந்துள்ளோம்.

உங்கள் படப்பிடிப்பாளர்கள் எமது சுயரூபத்தை அறிவதற்கு, எம்மைத் துரத்தித் துரத்தி எத்தனை தடவைகள் படம் பிடித்திருப்பார்கள். ஆயினும், அவர்களாற் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், இப்போது ஏதோ நுண்ணோக்காடியை (Microscope) புகைப்படக்கருவி (கமறா–Camerra) யிற் பொருத்தி, எமது சுயரூபத்தையே கண்டுபிடித்துவிட்டார்கள். இதை நினைக்கும்போது, எமது எதிர்கால வாழ்வு பற்றி நாம் கவலைகொள்ள வேண்டியிருக்கிறது. இப்போது, மனிதர்களாகிய உங்களுக்கு எம்மீதுள்ள ஆத்திரம் பன்மடங்காகியுள்ளது. ஆகவே, இனியும் நாம் உங்கள் மத்தியில் ஒளிந்து ஒளிந்து, சுரண்டி வாழ முடியாது. எம்மைப் பற்றிய முழுவிபரங்களையும் சுருக்கமாகச் சொல்லிவிடுகின்றேன்.

நாம் சராசரியாக ஆறு மில்லி மீற்றர் நீளத் திற்குட்பட்ட உடலமைப்பைக் கொண்டுள்ளோம். எம்மினத்தில் பலவகையினர் காணப்பட்டாலும், மனிதர்களாகிய உங்களைத் தாக்குபவர்கள் கியூலக்ஸ், அனோபெலிஸ், ஏடிஸ் போன்ற மூன்று வகையினரேயாகும். இவர்க



ளுன், கியூலெக்சினுடைய இறக்கைகளில் எவ்வி தப் புள்ளிகளும் காணப்படாது தெளிவாகவே இருக்கும். இது அமரும்போது, அதன் உடலா னது தரைக்கு இணையாகவும், அதன் தலை மட்டும் கீழ்நோக்கி வளைந்தும் காணப்படும். இவைதான், உங்களுக்கு மூளைக்காய்ச்சலை உண்டுபண்ணுபவை. இரண்டாவது, அனோ பிலிசு. இதன் இறக்கைகளில் புள்ளிகள் காணப் படும். இது அமர்ந்திருக்கும்போது, அதன் உட லும் தலையும் ஒரே நேர்கோட்டில் இருக்கும். உங்களுக்கு மலேரியாக் காய்ச்சலை உண்டுபண் ணுவது இதுதான். மூன்றாவது ஏடிஸ். இந்த ஏடிஸ்சுக்கு இறக்கைகள் சற்றுப் பழுப்பு நிற மாகவே காணப்படும். இது, மஞ்சட் காய்ச்சலை உண்டாக்குவதில் வல்லமை பெற்றது. இந்த மூன்று வகையினரும்தான் உங்களுக்குத் தீங்கு விளைவிப்பவை.

எம்மைப் பற்றிப் பொதுவாகத் தெரிந்து கொள்ளவேண்டுமானால், என்னை நன்கு அவ தானித்துக்கொண்டு, நான் சொல்வதை கேளுங்கள். ரோமம் போர்த்தப்பட்ட எமது உடலில் தலை, வயிறு, மார்பு என மூன்று பகுதிகள் காணப்படுகின்றன. தலையில் இரண்டு பெரிய கூட்டுக் கண்கள் உண்டு. அவற்றைச் சுற்றி தேன்கூடு போன்ற கதிர் சிதறுவிக்கும் அமைவு காணப்படுகின்றது. கண்களால், ஒரு சில அடிகள் தூரத்திற்கு மேல் எம்மால் பார்க்க முடியாது. அதற்கு இணையாக, இரண்டு நூல் போன்ற உணர் கொம்புகள் (Antenna) எமக்கு உதவுகின்றன. நாம் யாரைத் தாக்க நினைக்கி றோமோ, அவரைக் கண்டுபிடிப்பதற்காக, வெப்பத்தை நாடிச் செல்பவை இந்த உணர் கொம்புகள் தான். எமது மார்புப் பகுதியில் ஆறு கால்கள் இருக்கின்றன. ஒவ்வொரு காலி லும் ஒருசோடி கூரிய நகங்கள் உள்ளன. இதே பகுதியில், சுவாசிப்பதற்கென இருசோடித் துவா ரங்கள் இருக்கின்றன. எமது உருவத்தைக் கொண்டியக்குவதற்கென மிகவும் மெலிதான இரு இறக்கைகள் உள்ளன. இவற்றை நாம் அசைத்தவாறு உங்களை நெருங்கும் வேளையில் தான், நீங்கள் எம்மை இலகுவில் இனங்கண்டு விடுகிறீர்கள்.

எம்மில், பெண் நுளம்புகளே உங்கள் இரத் தத்தை உறிஞ்சி வாழ்பவை. ஆண் நுளம்புகள் தாவரங்களில் உள்ள ரசங்களையே உணவாக உறிஞ்சுகின்றன. ஆகவே, எம்மில் ஒவ்வொரு வரும் உயிர் வாழ்வதற்கு, ஒவ்வொருவகை உயிர் இனத்தையே சார்ந்து வாழவேண்டி யுள்ளது என்பதை அப்போது நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். பெண் நுளம்பின் உறிஞ்சும் குழாயில் ஊசிபோன்ற ஆறு உறுப்புக்கள் இருப்பதை நீங்கள் அவதானிக்கலாம். அவற்

றைக்கொண்டே, உங்கள் சருமம் முதலில் துளையிடப்படுகிறது. பின்னர், உறிஞ்சுகுழாயினால் இரத்தம் உறிஞ்சப்படுகிறது. இது உறையாமல் இருப்பதற்காக, உமிழ்நீரைச் சுரப்பதற்கு ஒரு குழாயும், இரத்தத்தை உறிஞ்சி உள்ளிழுப்பதற்குஇன்னொரு குழாயுமாக,இரண்டு குழாய்கள் இருக்கின்றன. இரத்தம் உறிஞ்சப்பட்ட இடத்தில் ஒருவித அரிப்பையும், வீக்கத்தையும் ஏற்படுத்துவது இந்த உமிழ்நீர்தான். உங்களின் உடலில் வாடையும் வெப்பமும் கொண்டவர்களையே இந்தப்பெண் நுளம்புகள் தாக்கும். இவை, தங்கள் எடையைப்போன்று இருமடங்கு இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன. ஏனெனில்,அதன் வயிற்றில் உள்ள முட்டைகள் வளர்ச்சியடைய,அதிகளவு இரத்தம் தேவைப்படுகிறது.

இவ்வளவும் சொல்லி முடித்த பின்பு, இனி மறைப்பதற்கு என்ன இருக்கிறது? எஞ்சியிருப்பவை எமது வாழ்க்கை முறைகள் பற்றியவையும், இனப்பெருக்கம் பற்றியவையுமேயாகும். அவற்றையும் கூறிவிடுகிறேன்.

பெண் நுளம்பானது, ஆண் நுளம்புகளைக் கவர்வதற்காக, தங்கள் இறக்கைகளை விரைவாக அசைக்கும். அதனால் எழும் இனிமையான ரீங்கார ஒலியினைக் கேட்ட ஆண் நுளம்புகள் பெண்நுளம்புகளை நெருங்கி இணைகின்றன. இதன் விளைவாக, பெண் நுளம்பானது 300 முட்டைகள் வரையில் நீரில் இடுகின்றது. முட்டைகள் மீது வெப்பம் படுவதனால். அவை இரண்டு மூன்று நாட்களின் பின்னர் புழுக்களாக மாறிவிடுகின்றன. நீருக்கடியில் வாழும் இவை, நுண்ணிய தாவரங்களையே உண்டு வாழ்கின்றன. சில நாட்களில் இவை கூட்டுப் புழுக்களாக மாறி, நான்கு நாட்களின் பின் என்னைப்போன்ற உருவத்தை அடைகின்றன

மனிதர்களாகிய நீங்கள், எவ்வளவுதான் எம்மை அழிப்பதற்கு உங்கள் விஞ்ஞான, தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியபோதிலும், நாமும் எப்படியாவது எதிர்நீச்சலடித்து வாழத்தானே பார்ப்போம்.

நாங்கள் உங்களை நெருங்கமுடியாதவாறு வலை பின்னி, அதற்கு எங்களது பெயரையே வைத்து அதாவது,நுளம்பு வலையென அழைத்து அதைப் படுக்கை அறையில் கட்டி, அதற்குள் புகுந்து படுப்பீர்கள். அப்படியிருந்தும், அதற்குள்ளேயும் நுழைந்து தாக்கி, இரத்தத்தை உறிஞ்சுவதற்கு ஏதும் வழியுண்டா என நாம் முயற்சிப்பதையும், நீங்கள் படுத்திருந்தவாறு அவதானித்திருப்பீர்கள். இப்படி முயன்றும் முடியாமல், பட்டினியுடன் திரும்பிச்சென்ற நாட்கள் ஏராளம். அடுத்தது, திரியைப் பற்றவைத்துக்

கொண்டு படுப்பீர்கள் அந்தத் திரிக்கும், எமது பெயரைக் கொண்டு நுளம்புத்திரி என்று அழைக்கிறீர்கள். அவை எமக்குப் பெருஞ் சினத்தை ஏற்படுத்தும். இருந்தபோதிலும், பசியின் நிமித்தம் உங்களை நெருங்க முயற்சிப்போம். முடியாமற் போய்விடும். அந்த நுளம்புத்திரியின் புகையினால் எம்மிற் பலர் உணவின்றி, இருப்பிடம் செல்ல முடியாமல் இடைவெளிகளில் மயங்கி விழுந்த நாட்கள் எத்தனை! இப்படி நாம் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும்போது, ஒரு மகிழ்ச்சியான செய்தி எமக்கெட்டியது. நுளம்புத்திரியைப் பற்றவைத்துப் படுப்பதனால் மனிதர்களின் சுகாதார வாழ்விற்குக் கேடுவிளையும் என்று! நீங்களா கேட்கப்போகிறீர்கள்? நுளம்பான எங்களின் தொல்லையைவிட, நுளம்புத்திரியின் புகை மேலானது என்று எண்ணி, தொடர்ந்தும் பாவித்தவண்ணமே இருக்கிறீர்கள். இது, மீண்டும் எமக்குக் கவலையைத் தருகின்றது.

இவ்வளவு நேரமும் எமது உடலமைப்புப் பற்றியும் எமது வாழ்க்கை முறைகள் பற்றியும், உங்களை அண்டி நாம் வாழ்வதால், உங்களை நெருங்குவதற்கு நாம் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்கவேண்டியுள்ளது என்பதையும் நன்கு தெரிந்துகொண்டிருப்பீர்கள். ஆகவே இந்தப் பூமியில் வாழ்வதற்கு உங்களுக்கு எவ்வளவு உரிமை உண்டோ, அதே அளவுஉரிமை எமக்கும் உண்டல்லவா? மனிதர்களாகிய நீங்கள், எந்தவோர் உயிரினத்திலும் உங்கள் உயிர்வாழ்வுக்காகத் தங்கி வாழ்வதில்லையா? எந்தவோர் உயிரையும் நீங்கள் கொன்றதில்லையா? நன்கு சிந்தித்துப்பாருங்கள்.

நீங்கள் எம்மை அழித்துவிடுவதற்கு முயற்சிக்கிறபோதிலும், நாமும் அதற்கு எதிராக எதிர்நீச்சலடித்து வாழத்தானே பார்ப்போம். இனி யாவது, எங்கள்மீது உங்கள் மனிதாபிமானத்தைக் காட்ட விரும்பினால் காட்டுங்கள்; இல்லையேல், அரைகுறையாக விட்டுவிடாமல், எம்மினத்தையே பூண்டோடு அழித்துவிட, உங்கள் முழு விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

— இசையமுதன் —

---

☐ உங்கள் பெண்ணை யாருக்குக் கல்யாணம் செய்து கொடுப்பீர்கள்? ஒரு கதாசிரியருக்கு மட்டும் கட்டிக்கொடுக்கமாட்டேன் என்று சொன்னீர்களாமே; ஏன் அப்படி? அவருக்குக் கட்டிக்கொடுத்தால், நிறையப் புத்தகங்கள் கொடுக்கவேண்டி இருக்குமே; அதனால் தான்.

# கவிதை சொல்லும் கதை

நெஞ்சு விறைத்துப் போய்
நெக்குருகிச் சிலிர்க்கிறது!
நினைவெல்லாம் தீமூண்டு
நீறாகித் தகிக்கிறது!
இதயத்துச் செங்குருதி
இடம் பெயர்ந்து உடலெங்கும்
ஓட மறந்து போய்

உறைந்து கிடக்கிறது!
மோகும் வயதெனினும்,
போகாமல் இழுத்தடித்துச்
சாகும் நிலைதவிர்க்கச்
'சருகுகளே' விரும்புகையில்,
வாழும் வயதினிலும்
வாலிபத்துச் சுகம் விரும்பா,
தாமே வெடிகுண்டாய்த்
தரை, கடலிற் போய் வெடித்தே,
தன்னைச் சிதைத்தேனும்
தமிழீழச் சுடரேற்றும்
மின்னற் கரும்புலிகள்
சிலிர்த்தெழுந்து சீறிவரும்
வண்ணத் திருநாட்டை
வடிவமைக்குந் 'தம்பி' யவன்
எண்ணச் சிறகசைப்பில்
எழுந்துயரும் தேசமிது!
கந்தகத்தின் நெடிகிளம்பிக்
கருப்பைக்குள் ஊடுருவக்
கண் விழிக்கும் சிறுகுழந்தை
கரும்புலியாய்த் தான் பிறக்கும்!
முற்றுந் துறந்திட்ட முனி கூட,
மோகத்தீ
பற்றியெரிந்திட்ட பழங்கதைகள்
பலவுண்டு!

சற்றே சந்திப்பீர்;
சரித்திரத்தில் உலகியல்புப்
பற்றேதுமின்றிப் பாய்ந்திறக்கும்
கரும்புலியை!

ஒரு நொடிக்குள் அது நடக்கும்!
உடல் பிளந்து, துகளாகி,
உயிர் பிரியக், கதை முடிக்கும்;
கடல் அளந்து போர் புரியும்
கரும்புலிகள் தினவடங்கும்!
உண்டியுடன் மதுபானம்
உல்லாசம் கேளிக்கை

கண்டிருப்போர் உணரார்
களப்பலியை!

அண்டி வரும்
அலியேறும் அரங்கென்றா
அறவிலிகள் நினைத்தார்கள்?
புலியேறும் அரங்கில் அவர் புழு!

– பாரதிசீலன் –

# மாரடைப்பிற்கான முன் அறிகுறிகள் எவை?

கொழுப்புச்சத்துக்கள் இரத்தக் குழாய்களில் அடைத்துக்கொள்வதனால்தான், உடலிற் பாய்ந்தோடும் இரத்தம் சீராகவும் எளிதாகவும் ஓடாமல், பிடிப்போடு நிதானமாக ஓடுகின்றது. என்றைக்காவது ஒருநாள், இருதயப் பகுதியில் இருந்து புறப்படும் இரத்தம் முறையாகச் செல்லமுடியாமல், இரத்த அழுத்தம் அதிகமாவதற்கு வாய்ப்பளிக்கின்றது. இதனால், இதயத்தில் இரத்தம் பாயமுடியாத காரணத்தினால், இரத்தக் குழாய் வெடிக்கின்றது. இதனையே மாரடைப்பு என்கிறோம்.

இதே பகுதியில் இருக்கும் வால்வுகள், திறந்து மூடும் செயற்பாட்டினைப் பிடிப்பின் காரணமாகச் செய்யமுடியாமல் இறந்துவிடுகின்றது. இதன் காரணமாகவும் மாரடைப்பு நோய் ஏற்படுகின்றது. மாரடைப்பு நோய் ஒருவருக்கு ஏற்படும் முன்னர், சுமார் 06 வருடங்களுக்கு முன்பிருந்தே அவ்வப்போது விட்டு விட்டு நெஞ்சுவலி இருக்குமாம். சிலருக்கு இடுப்புவலி, நெஞ்சுவலி போன்றனவும் இருக்கக்கூடும். அதிலும் வேறுபாடுகள் இருக்கலாம் என்றும் ஒரு சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

நெஞ்சுவலிக்காரர்கள் வெங்காயத்தை அதிகளவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். மட்டுமல்லாது, வலி உள்ள இடங்களில் ஆமணக்கு எண்ணையை உடல் தாங்கிக்கொள்ளும் அளவுக்குச் சூடு காட்டி, சுமார் 15 நிமிடங்களுக்கு நன்றாக அழுத்தித் தேய்த்துவிட வேண்டும். இப்படி மூன்று தினங்கள் செய்து வந்தால், அதிகமான பலன் கிட்டும். அத்துடன், இத்தினங்களில் காலை உணவிற்கு முன் துளசி இலையையும் வேப்பிலையையும் நன்றாக மென்றிட வேண்டும். மற்றப்படி, உணவில் கட்டுப்பாடு தேவையில்லை. ஆனால், இரவு அரை வயிற்றுக்கு உண்ணவேண்டும். உடம்பின்

இரத்தக் குழாய்களில் அதாவது, நெஞ்சுப்பகுதியில் இரத்தம் சிரமமாகப் பிடிப்புடன் செல்வதால், நெஞ்சுப் பகுதியில் வலி ஏற்படுகின்றது அல்லவா? அதேபோல மூட்டுக்களின் உராய்வினாலும் வலி ஏற்படுகின்றது. மேலும், கை கால் பகுதிகளில் இரத்தம் சரியாகப் புகுந்து செல்லாத வேளையில் பிடிப்பின் காரணமாக வலி உண்டாகின்றது அல்லவா? வெப்பத்தால் பொருள்கள் விரிவடைகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். இதன்படி, உடலுக்கு அனற்காற்றுப்படுகின்றபோது எண்ணைப்பசை, விரிவடைந்த மயிர்க்கால் துவாரங்களின் வழியாக இரத்தத்திற் கலந்து விடுகின்றன. இதனால், நெஞ்சுப் பகுதியில் உள்ள இரத்தக் குழாய்கள் விரிவடைவதோடு, அடைத்திருக்கும் கொழுப்புப் பொருள்களும் இளகி, இரத்தத்துடன் படிப்படியாகக் கலந்து, இரத்தக் குழாய்கள் சுத்தமடைகின்றன.

இதனால், நெஞ்சுவலி குறைகின்றது, அல்லது அகன்றுவிடுகின்றது. மேலும், இந்த எண்ணைப் பசை மூட்டுக்களை இணைக்கும் பகுதிக்குச் சென்று வளவளப்பினை உண்டாக்கி, பிடிப்பு அகன்று விடுவதனால் மூட்டுக்களில் ஏற்படும் வலியும் அகன்றுவிடுகின்றது. நம் உடலில் இரத்தம் சீராகப் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தால், எப்போதும் எதுவித வலியும் இன்றி மகிழ்வோடு வாழமுடியும்.


# விமல் தையலகம்

ஆடவர்களே! நங்கையர்களே! இன்றைய நவநாகரிகத்திற் கேற்ப ஆடைகளைத் தைத்துக் கொடுப்பதில் முதன்மை வகிப்பது 'விமல்' தையலகம். ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்.

△ மாணவ மாணவியருக்கான சீருடைகள்
△ சிறுவர் சிறுமியர்களுக்கான தைக்கப்பட்ட ஆடைகள்
△ பாடசாலைப் புத்தகப் பைகள் ( கிற் பாக் )

என்பவற்றை நேர்த்தியான முறையில் தைத்துப் பெற்றுக்கொள்ள

# விமல் தையலகம்

கொடிகாமம் வீதி, கரவெட்டி.

# 'கின்னஸ்' பதிவேட்டுத் தகவல்கள்

## 250 அறைகள் கொண்ட வீடு

வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்றால், முதலில் வீட்டைக் கொடுங்கள் என்கிறார்கள். குடியிருக்க, தகுந்த வீட்டு வசதி இல்லாத காரணத்தினாலேயே, அப்படி ஒரு கேள்வி. உலகத்திலுள்ள தனியார் வீடுகளில் மிகப் பெரிய வீடு, அமெரிக்காவின் 'கறோலினா' மாநில 'அஸைவில்' என்னும் இடத்தில் உள்ள 'வோல்ரிமோர்' வீடாகும்.

இந்த வீடு 1890 ஆம் ஆண்டிற்கும் 1895 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்திற் கட்டப்பட்டது. 1,19,000 ஏக்கர் நிலப் பரப்பிலுள்ள பெருந்தோட்டப் பகுதியிலே கட்டப்பட்டுள்ள இவ் வீட்டில் 250 அறைகள் உள்ளன.

## உயரமான கலங்கரை விளக்கு

கடற்கரையோர நகரங்களில் கலங்கரை விளக்குகளைப் பார்க்கிறோம். உலகிலுள்ள கலங்கரை விளக்குகளில் மிகவும் உயரமான கலங்கரை விளக்கு ஜப்பானில் உள்ளது. ஜப்பானின் 'யோகஹேமா ஜமஸிக்ஹா, பூங்காவிலுள்ள இக்கலங்கரைவிளக்கின் உயரம் 106 மீற்றர்; அல்லது 348 அடிகள் ஆகும். வேகத்தைக் குதிரையின் வேகத்திற்கு ஒப்பிடுவதுபோல் வெளிச்சத்தை மெழுகு விளக்கின் வெளிச்சத்திற்கு ஒப்பிடுவார்கள். அப்படி ஒப்பிட்டுப் பார்க்கும் போது, 6 இலட்சம் மெழுகுதிரிகளின் ஒட்டுமொத்த வெளிச்சம் என்றும், இவ் விளக்கின் ஒளி 321 கி. மீ. அல்லது 20 மைல்கள் தூரத்திற்குத் தெரிகிறது என்றும் 'கின்னஸ்' கூறுகிறது.

## பழைமையான பிரமிட்

எகிப்து என்றவுடன், 'பிரமிட்கள்' தான் நம்எல்லோருக்கும் ஞாபகச் சின்னமாக வரும். எகிப்தின் சக்காராவில் உள்ள 'தோஜ்ஜர் படிப்பிரமிட்'த்தான், உலகில் உள்ள பிரமிட்க்களில் மிகவும் பழைமையானது, பெரியது என்று சொல்ல முடியாது. ஆனால் பழைமையானது. தோஜ்ஜருக்கு முதல் அமைச்சராகவும், சட்ட நிபுணராகவும், இராசிபார்ப்பவராகவும் இருந்து வந்த, இன்ஹோற்றின் என்பவர் தான், இப்பிரமிடை வடிவமைத்துக் கட்டியவர். கி. மு. 2686 முதல் 2613 வரையிலான ஆண்டுக் காலங்களில், செதுக்கப்பட்ட கற்களால் இது கட்டப்பட்டுள்ளது. ஆறு வெவ்வேறு உயரமான படிகளைக்கொண்ட

இப்பிரமிட், 62 மீற்றர்கள் அல்லது 204 அடிகள் உயரம் கொண்டது.

மிகவும் பழைமையான பிரமிட்களை எகிப்தில் பார்த்தோம். ஆனால், மிகவும் பெரிய பிரமிடை எங்கு பார்ப்பது? இந்த உலகிலேயே பெரிய பிரமிடைப் பார்ப்பது என்றால், மெக்ஸிக்கோவுக்குச் செல்லவேண்டும். உலகிலே கட்டப்பட்டுள்ள பிரமிட்களில் மிகவும் பெரிய பிரமிட் மெக்ஸிக்கோ நகருக்குத் தென்கிழக்கே 63 மைல்கள் தூரத்தில், செலலாண்டிக் றிவாவியாவில் உள்ள ஆசால்ஹோர்ட் பிரமிட் ஆகும். 54 மீற்றர்கள், அல்லது 177 அடிகள் உயரம் உள்ள இந்தப் பிரமிடின் அடித்தளம் அமைக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு 42 ஏக்கர் ஆகும். நீளம், உயரம், அகலத்தில் இதன் கொள்ளளவு 9 இலட்சத்து 90 ஆயிரம் மீற்றர்கள் ஆகும். (9,90,000)

## எலும்பு புதைக்கப்பட்ட சிலை

நம் ஊர்களில் மூலை முடுக்கெல்லாம் சிலைவைக்கப் படுவதை காண்கிறோம். உலகில் உள்ள மிகவும்நீளமானசிலை, ஆப்கானிஸ்தானின் பமியாவில் உள்ளது. சக்கிய புத்தாவின் நினைவுச்சின்னமாகக் கட்டப்பட்டுள்ள இச்சிலையில், சக்கியபுத்தாவின் இறந்த உடலின் எலும்புகள் புதைக்கப்பட்டு இருப்பதாக நம்பப்படுகின்றது.

கி.பி 03, அல்லது 04 ஆவது நூற்றாண்டில் பௌத்தர்களால் கட்டப்பட்டுள்ள இந்தச் சிலையின் நீளம் 305 மீற்றர்கள் அல்லது 1000 அடிகள் ஆகும்.

மரத்தால் செய்யப்பட்ட சிலைகளில் மிகவும் உயரமான சிலை, சீனத்தலைநகர் பெய்ஜிங்கில் வடமேற்கு லாமா ஆலயத்தில் உள்ளது. மீத்தியாவின் நினைவாக எழுப்பப்பட்டுள்ள இச்சிலை, ஒரே ஒரு வெள்ளைச் சந்தன மரத்தால் செதுக்கப்பட்டது. இதன் உயரம் 26 மீற்றர்கள் அல்லது 85.30 அடிகள் ஆகும். எந்த ஆண்டு இந்தச் சிலை செதுக்கப்பட்டது என கின்னஸ் கூறவில்லை.

சகல வித மரங்கள், பலகைகள் அரிவு வேலைகள் மற்றும், விறகு வகைகள்.

நியாயமான விலை!

துரிதமான சேவை!

**எஸ். ரி. வை. அரிவு ஆலை**

கூழாவடி, ஆனைக்கோட்டை.

*தரமான, சுகாதாரமான எமது தயாரிப்புக்கள்*

卐 பாண்

卐 பணிஸ்

卐 கேக்வகை

卐 கல்பணிஸ்

## யாழ் வெதுப்பகம்

**3ஆம் கட்டை, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.**

---

## தருமராசா மரவேலைத் தொழிலகம்

சகல இன மரங்களையும் உங்கள் விருப்பிற்கு ஏற்ப
நேர்த்தியான முறையில் அரிந்து பெற்றிட

**தருமராசா மரவேலைத் தொழிலகம்**

*தீராந்திகளாகவும்* *பலகைகளாகவும்*

வேண்டிய அளவுகளில், சேதமேற்படாதவாறு, மிகவும் தொழி
நுட்பத்துடன் அரிந்து கொடுப்பதில் முதன்மை பெற்றுத்
திகழ்வது

## தருமராசா
## மரவேலைத் தொழிலகம்

*279, அரசடி வீதி,* *கந்தர் மடம்,*
*யாழ்ப்பாணம்.*

# பச்சோந்தி இடத்திற்கு ஏற்ப நிறம் மாறுகிறதே; அது எப்படி?

பச்சோந்தி பல்லி இனத்தைச் சார்ந்த பிராணி. ஆபிரிக்கா, ஸ்பெயின், அரேபியா, மத்திய தூரகிழக்கு நாடுகள், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இந்தப் பிராணியைக் காணலாம்.

பச்சோந்தியின் நிறமாக பழுப்பு, மஞ்சள், பச்சை, நீலம் போன்ற வர்ணங்களில், ஏதாவது ஓர் அமைப்பில் கலந்துள்ள ஒரு வர்ணம் காணப்படும். சிலவகைப் பச்சோந்திகள் பசுமையான இலைகளை ஒத்துக் கூடியிருக்கும். இழைய நரம்புகளை ஒத்த வடிவமைப்பில் பச்சோந்தி அடிக்கடி தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும். பரவலாக, நம்பிக்கை மோசடி செய்பவர்களை, அடிக்கடி கட்சி மாறுகின்றவர்களை, சொன்ன பேச்சு மாறுகின்றவர்களைப் பச்சோந்தி என்று அழைக்கும் அளவுக்கு, இந்தப் பிராணியின் நிறம் மாறுந் தன்மை பழமொழி போலப் புழக்கத்தில் வந்து விட்டது. ஆனால், இப்படிக் கூறுவது சற்று மிகையே. வேறு எத்தனையோவிதப் பல்விகளும், மீன் வகைகளும்கூட, பச்சோந்தியைவிட வேகமாகவும், அதிகமாகவும் தங்கள் நிறத்தை மாற்றுகின்றன. மேலும், இவ்வகைப் பச்சோந்தியின் நிறம் மாறுவதும், தானிருக்கும் சூழலையோ, அல்லது இடத்தையோ, ஒத்ததாக, அதற்கு ஏற்றதாக மாறுவதாக இல்லை என்பதே உண்மை.

## சரி, பச்சோந்தி எப்படி நிறம் மாறுகிறது?

பச்சோந்தியின் தோலின் மேற்புறத்தில் நிறமிகள், அதாவது நிறத்தைத் தரும் பொருட்கள் இருக்கின்றன. பாதுகாப்பு (Defence) என்று சொல்லுவார்கள். பயம் போன்ற உணர்வு, வெப்ப மாற்றம், வேறு காரணங்கள் இவற்றால் இந்த நரம்புகள் பரவலாக மாறுவதும், அடர்த்தியாக மாறுவதும் நிகழுகின்றன. நமக்கு அச்சம், கோபம் போன்ற உணர்வுகளால் முகஞ் சிவப்பதும், படபடப்பு ஏற்படுவதும் போலவே பச்சோந்தியின் நிறமும் மாறுகின்றது.

# வியட்கொங்கும் விடுதலைப்புலிகளும்

வே. பாலகுமாரன்

எந்தவொரு விடுதலைப் போராட்ட அமைப்புப் பற்றியும், இப்போது விடுதலைப்புலிகள்பற்றிய அதன் இராணுவ அரசியற் செயற்பாடுகளின் நுணுக்கங்கள் பற்றிய ஆய்வுகள், அதன் ஒவ்வொரு செயலுக்கும் ஆயிரம் விளக்கங்கள் கற்பனைகள், கட்டுக்கதைகள் பிரமிப்பூட்டும் ஊகங்கள், எதிர்வு கூறல்கள், கடும் கண்டனங்கள் எனச் செய்யப்படுவதுபோல்; எக்காலகட்டத்திலும் செய்யப்பட்டிருக்கும் என நம்ப முடியாதுள்ளது.

மூன்றாம் கட்ட ஈழப்போர் எனப்படும் ஏப்ரல் 19ஆம் நாளுக்குப் பின்னர், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு அதி அற்புதமானது; மிகவும் வேறுபட்டது; தொகை ரீதியாகவும், தரரீதியாகவும் முன்னைய போராட்டக் காலகட்டங்களைவிட மிகத் தீர்க்கமானது என்பது பற்றித் தமிழர் தரப்பில் சொல்லப்படுவதைவிட, மிகத் தெளிவாக, மிக உயர்வாக மற்றத் தரப்புக்களால், செய்தி ஊடகங்களால், அரசியல் இராணுவத் திறனாய்வாளர்களால் கூறப்படும் கூற்றுக்களே இப்போது மிக அதிகமாக இருக்கும் விந்தை நிகழ்கின்றது. இதன் பொருள், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தின் தார்மீக நியாயங்களை, அது வளர்ந்து இறுதியில் அடையப்போகும் தர்க்கரீதியான அதன் இலக்கை உலகம் உணரத்தொடங்கிவிட்டது; அல்லது இனிமேலும் இவ்வுண்மைகளைத் தம்மால் மறைக்கமுடியாது என்பதை உலகம் ஒப்புக்கொள்கிறது என்பதேயாகும்.

அதேவேளை, தமிழீழ மக்கள் அவர்கள் எவராயினும்சரி, தமது ஊசலாடும் நிலைகளை, தளம்பற் கருத்துக்களைக் கைவிட்டு, விடுதலைப்போரில் முழுமையாக ஈடுபடும் மனோநிலையை, போராட்ட வளர்ச்சியோடு தம்மையும் விடுதலைக்குத் தயாராக்கி அதனோட்டத்தோடு தாமும் விரையும் வேகத்தைப் பெறவேண்டும் என்பதையும் இவை உணர்த்தி நிற்கின்றன. எனவே, இம்முறை அரசியல் அரங்கம் என்பது இத்தகைய கருத்துக்கள் சிலவற்றின் தொகுப்பாகவே அமைகின்றது. முதலில், வசந்தராஜா என்கின்ற முன்னாள் சந்திரிகா அம்மையாரின் நண்பரும், இந்நாள் எதிர்ப்பாளருமான சிங்களச் செய்தியாளர் கூறுவது என்னவென்பதைப் பார்க்கலாம். அவர் எழுதுகின்றார்:-

'நாம் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன, தமிழர் சிக்கலுக்குத் தீர்வுகாணவேண்டுமெனின், எந்த விவாதத்திற்கும் இடமின்றித் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமை என்பது விடுதலைப் புலிகளே என்பதை முதலில் ஏற்கவேண்டும். எனவே, விடுதலைப் புலிகளின் மக்கள் ஆதரவுத்தளத்தை அழித்து, அவர்களை இறுதியில் இராணுவ ரீதியாக அழிக்க முடியும் என்பது நிச்சயமாகத் தோல்வியைத் தழுவுமென நான் மிகத் திடமாக நம்புகின்றேன். எமக்கு இருக்கக்கூடிய ஒரேயோர் உருப்படியான வழி, புலிகளைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்று அவர்களோடு ஆக்கபூர்வமான உடன்பாடு காணமுயல்வதுதான்' என இவ்வளவும் கூறிய வசந்தராஜா, இனிக் கூறுவதுதான் மிக முக்கியமானது. ''எந்த வகையில் மேற்கத்தைய ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகச் செயற்பட்டபோது, சிங்களத் தேசியவாதம் முற்போக்கானது எனக்கருதப்படுகின்றதோ அந்த வகையில் தமிழ்த்தேசியவாதம் இன்று முற்போக்கானது என்பது ஏற்கப்படவேண்டும். ஒரு தேசம் தனது தன்னாட்சி உரிமைக்காகப் போராடுவது என்கின்ற தத்துவமே இதன் அடிப்படை. சிங்களத் தேசியவாதம் இதற்கு எதிராகச் செயற்படும்போது, அது அடக்கு முறையாகிவிடுகின்றது. அப்போது அதன் தத்துவம், பெரிய நாடொன்று, சிறிய தேசமானது விடுதலை பெறுவதைத் தடுக்கும் பிற்போக்குத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகிவிடுகின்றது.'' என்கிறார். இவை ஓர் உள்ளூர்ப் பத்திரிகையாளர் கருத்து. இனி வெளிநாட்டு ஆய்வாளரொருவர் கருத்தையும் கவனிப்போம். 'சிறீலங்காவின் போரியல் வரலாற்றின் பாடங்கள்' என்கிற தலைப்பில் அண்மையில் 'லங்கா கார்டியன்' இதழில் அனிருத் தேஷ்பாண்டேயின் நுண்ணிய ஆய்வினைப் பாருங்கள். அவர் தொடக்கத்திலே

கூறிவிடுகின்றார். 'இப்பொழுது புலிகளுக்கு எதிராகக் கடும் கண்டனங்கள் செய்தி ஊடகங்களில் எழும் நிலையில், நான் சொல்லப் போவது அதிகம் வரவேற்பைப் பெறாமலிருக்கலாம். ஆனால் தற்போது சிறீலங்காவில் நிலவும் இராணுவ நிலைமைகளின் உண்மையான பொருத்தப்பாடான பார்வை இது. சிறிலங்காவின் இராணுவ வரலாற்றாளர், அரசியல்வாதிகள் ஓர் உண்மையை உணர்ந்து இப்பொழுது விழிப்படையவேண்டும். அதுதான் சிறிலங்காவில் தமிழர் போர் என்பது மிகத் தீர்க்கமான ஒரு கட்டத்தை இப்போது அடைந்துவிட்டது. சிறிலங்காவில் மிக முக்கிய நிகழ்வொன்று இப்பொழுது அரங்கேறுகின்றது.'' இவ்வாறு முன்னுரை வழங்கிய தேஷ்பான்டே, இரண்டு முடிவுகளைத் தனது ஆய்வின் முடிவுகளாக வலியுறுத்துகின்றார். ''ஒன்று, நடைமுறையில் விடுதலைப்புலிகள் கொழும்பிற்கு எதிரான போரில் ஏற்கனவே வெற்றியை அடைந்துவிட்டனர். இரண்டு, ஓர் அதிஅற்புதமான இராணுவத் தலைவரால் வழி நடத்தப்படும் புலிகள் இயக்கம் மிகச் செயற்றிறன் கொண்ட இயக்கம் என்பதை ஏற்கனவே வரலாறு ஒப்புக்கொண்டுவிட்டது.

''தமது அரசியல் தன்னாட்சி உரிமைக்காகப் போராடுவதற்காக, அதை அடைவதற்காக, அசைக்கமுடியாத உறுதிகொண்டோரால் தோற்றுவிக்கப்பட்ட இவ் அமைப்புப்போல வரலாற்றில் எதுவும் கிடையாது.'' இவ்வாறு எழுதும் தேஷ்பான்டே, அதற்கான காரணங்களையும் வெகுதெளிவாக விளக்குகின்றார். அவர் தொடர்ந்து எழுதுகின்றார்:-''போரியல் வரலாற்று விற்பன்னர்களான பண்டைக்கால சன் சூ(Sun - zu) தொட்டு இக்கால குளோஸ்விற்ஸ் (Clausewitz) வரை போர் என்பது, குறிப்பிட்டதொரு கொள்கையை அடைவதற்கான இன்னொரு வழி என்றே குறிப்பிடுகின்றனர். போர் என்பது இழுபறி நிலையில் சிக்கிக்கொள்வது அல்ல. எதிரி மீதான பூரண வெற்றி என்பது, வெறுமனே எதிரியின் இராணுவத்தினரை முற்றாக அழிப்பதன் மூலம் அடையப்படுவதல்ல. போர் ஒன்றின் பூரண வெற்றியானது போரில் வெற்றி பெறுபவர் தனது விருப்பை, இலட்சியத்தை, தோற்றவன்மீது பிரயோகித்து, அவனை அதை ஏற்க வைக்கும்போதே அடையப்படுகின்றது. போரில் இறுதி வெற்றி என்பது, ஒரு குறிப்பிட்ட போர் தொடர்பான அனைத்துக் கூறுகளையும் பூரணமாக விளக்கி அதற்கூடாக உருவாக்கப்படும் மூலோபாயத்தைப் பொறுத்தது. எனவே போரை வழிநடத்தும் அரசியலாளர்களும், தளபதிகளும், அதிவிசேட அரசியல் இராணுவ

வல்லமை ஆற்றல் அறிவுத்திறன் கொண்டோராக இருக்கவேண்டும். சமகாலப் போரியல் வரலாற்றில் இதற்குச் சான்றாக விளங்குவது பிரான்ஸிய, அமெரிக்க, தென்வியட்நாம் அரசுகளுக்கு எதிராக வியற்கொங்கினர் பெற்ற வெற்றி. எனவே, இத்தகைய வரலாற்றுப் போரியற் பின்னணியில் பார்க்கும்போது; சிறிலங்காவில் இராணுவத் தோல்விகள் துலாம்பரமாகத் தெரிகின்றன. பல்வேறு அரசுகள் சோவியத் உட்பட இவ்வரலாற்றின் விதியை உணராமல் தோற்றுப்போனமை தெரிகிறதே'' என்கிறார். எனவே, ஏற்கனவே போரில் தோற்றுவிட்ட நிலையில் இருக்கும் சிங்கள அரசு, இனிமேல் மேற்கொள்ளும் எத்தகைய பாரிய இராணுவ நடவடிக்கையாலும் எப்பயனும் கிடைக்கப்போவது இல்லை. உண்மையில், வடக்கில் புலிகளால் முற்றுகையிடப்பட்ட நிலையில் இருக்கும் இராணுவத் தளங்களை மீட்கும் முயற்சியாக, இத்தகைய பெரும் படையெடுப்பை மேற்கொள்வதைப் புலிகளும் உண்மையிலேயே விரும்புகின்றார்கள். அதன்மூலம், சிங்கள இராணுவம் போரில் என்றுமே வெல்லமுடியாத, மீளமுடியாத பொறியிற் சிக்கவும், புலிகளுக்கு இராணுவத் தளபாடங்கள் பலவற்றை விநியோகிக்கவுமே வழி ஏற்படும். ஏனென்றால், போரியல் வரலாற்றாளர்கள் சிறிலங்கா இராணுவத்தால், புலிகளின் தனிச்சொத்தாக மாறிவிட்ட அவர்களுக்கே உரித்தான அதிவிரைவு நகர்வுப் போர் முறையினை என்றுமே வெல்லமுடியாது என்பதே, அவர்களின் முடிந்த முடிவாகும்'' என்கிறார் தேஷ்பாண்டே. மேலும், அவர் வெளிநாட்டு உதவி என்பதன் அழுத்தமற்ற தன்மையையும் விளக்கி, சிறிலங்கா அரசிற்கு இருக்கும் ஒரேவழி, தன்னை அழிவில் இருந்து காப்பாற்ற மிஞ்சியிருக்கும் ஒரேயொரு பாதை, புலிகள் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்று, புலிகளுடன் உடன்பாட்டிற்குவர அமைதிப்பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதுதான் எனத் தொடர்கின்றார்.

எனவே, இப்பொழுது கதை தெளிவாகிவிட்டது. இத்தகைய தோர் ஆய்வுப் பின்னணியிலே சிறிலங்காவின் எதிர்காலம் எவ்வளவு இருள்மயமாகிவிட்டது என்பது தெளிவாகிவிட்டது. இப்பொழுது சிங்களத்தில் என்ன நடக்கிறது? நாளாந்தம் போருக்குச் செலவழிக்கும் ஒரு மில்லியன் டொலர், நாட்டிலே பொருட்களின் விலையைக் கிடுகிடுவென உயரவைக்கின்றது; இதனால் பணவீக்கம் கூடுகின்றது; பங்குச் சந்தையோ பாதாளம் நோக்கிப் போகின்றது; இதன் குறிகாட்டியெண் சரி அரைவாசியாகக் குறைந்துவிட்டது; போருக்கான செலவைப்

பெற்றுக்கொள்ள பாதுகாப்புவரி 3.5 விழுக்காட்டிலிருந்து 4.5 விழுக்காடு ஆகிவிட்டது; இது இன்னும் அதிகரிக்கும் சாத்தியம் இருப்பதாகக் கருதப்படுகின்றது; அபிவிருத்தித் திட்டங்கள் பல வற்றின் வேகம் குறைக்கப்பட்ட தோடு, பல திட்டங்கள் கைவிடப் பட்டதாயிற்று; புதிய திட்டங் களைத் தள்ளிப்போட்டாயிற்று; பொருண்மிய ரீதியாக இமாலயச் சுமையை, சிங்கள மக்கள் வெல்ல முடியாத போருக்காகச் சுமக்கப் போகிறார்கள். வேலையின்மை அதிகரிப்பதால், முன்னர் போல சிங்கள வாலிபர்களிடையே அதி ருப்தி விரக்தியாகி, விரக்தி வெறுப்பாக மாறுகின்றது. இச் சுமைகளை ஏற்கனவே தாங்கிய தாலே, அதை உணர்ந்ததாலே சிங்கள மக்கள், போரை நிறுத்தி சனாதிபதி முறையை மாற்றி ஊழலை ஒழித்து, நல்வாழ்விற்கு வழி காட்டுவோம்; ஒளி கொடுப் போம் என்றபோது, சந்திரிகா அம்மையாருக்கு 62.8 விழுக்காடு வாக்குகளை அளித்து வரலாற் றுச் சாதனையைப் படைத்தனர். ஆனால், இவை எல்லாம் எண்ணி ஆறு மாதங்களுக்குள்ளே அர்த்த மற்ற பகற்கனவாகிவிட்டன. போர் தொடர்கிறது; ஜூலை 15 சனாதிபதி முறை ஒழிப்புக் காலக்கெடுவைக் குப்பைத் தொட் டிக்குள் போட்டாயிற்று. வாழ்க் கைச் செலவுச் சுமை தாங்க முடியாததாகிவிட்டது; எனவே, இப்பொழுது சிங்கள அரசு கிடுக் கிப் பிடியில் என்கிறார் மேர்வின் டீ சில்வா. ஒருபக்கம் புலிகள் போராட்டம், மறுபக்கம் கிளர்ந் தெழப்போகும் சிங்கள இளை ஞர்கள், என்ன செய்யப் போகின்றார் சந்திரிகா? ஆறுகள் பின்னோக்கிப் பாயுமா? என்கிறார் அவர். 'சண்டேரைம்ஸ்' ஆசிரி யரும் பிரபலமான செய்தியா ளருமான சிங்கா ரணதுங்காவோ, சிங்களவரை ஏமாற்றுவதே சிங்க ளத்தலைவர்களின் வழமையான வேலையாகிவிட்டது என்கிறார். எனவேதான் 'சண்டே ஐலண்ட்' பத்திரிகையில் 'தாரகி' எனப்படும் D. P. சிவராம், புலிகளை அழிக்க அநுருத்த றத்வத்த விதித்த காலக்கெடு முடிந்தபின் (ஒரு வருடம்) றத்வத்தவும், கதிர் காமரும் தமக்குப் புரியாத பல விடயங்களைப்பற்றி அறியவேண் டிவருமென நக்கலாகக் கூறுகின் றார். எனவே, இவ்வாறாகப் பலரும் கூறி நிற்கும் பொழுது, நாம் என்ன கூற இருக்கிறது. ஆசியாவின் இரண்டாவது வியட் நாம் தமிழீழமென, ஆய் வாளர் ஆய்வுசெய்யும் நிலை தோன்றிவிட்டது என்பதைக் கூறு வதைத்தவிர வேறுவழியில்லை.

---

☐ *நிலத்தில் வாழும் மிருகங் களில் மிகப்பெரியவை ஆபிரிக்கா நாட்டு யானைகளாகும். இவை 6½ தொன் வரையான எடையைக் கொண்டவையாகும்.*

# அருச்சுனா சட்டமிடல் விற்பனை நிலையம்

உங்கள் படங்களை நல்லமுறையில் பேணிக்காத்திட, சிறந்த முறையில் சட்டமிடல் செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## அருச்சுனா

அத்துடன் சிறந்தமுறையில் சட்டமிடப்பட்ட சகல சுவாமிப் படங்களையும் சட்டமிடல் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## அருச்சுனா

சகல கறுப்பு வெள்ளைக் கலவைகளும், பேப்பர்களும், படச் சுருள்களும் நியாயமான விலையில் விற்பனை செய்பவர்கள்

## அருச்சுனா சட்டமிடல் விற்பனை நிலையம்

85/3, அருச்சுனா சாலை,
யாழ்நகர்.


"வானோசை" என்னும் கண்ணைக்கவரும், உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும், இம் மாதம் முதல் வெளிவரும் இவ் வெளியீடு பல்லோரும் புகழ, நீடித்து வெளிவர வாழ்த்துகின்றோம்.

# வானோசை

வானோசை மக்களின் மன ஓசையுடன் சங்கமமாகி அறிவியலில் ஒப்புவுவமை இல்லாது வளர்ந்து நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றது.


## அறிவகம் புத்தகசாலை

தட்டெழுத்து செய்விப்பதற்கும்
றோணியோப் பிரதி எடுப்பதற்கும்
பாடசாலை உபகரணங்கள் வாங்குவதற்கும்

பாடசாலை மாணவர்கள்,
அலுவலக உத்தியோகத்தர்கள்

மற்றும் அனைவரும் தங்கள் மன நிறைவிற்கு
நிகரானதும் தரமானதுமான சேவைக்கு
நாடவேண்டிய இடம்

**அறிவகம் புத்தகசாலை**

374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



தொடர்பு:- வானோசை பணியகம்
இல. 571, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.



புதுயுக பதிப்பகம் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.